# சுபீட்சம்

SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

சனிக்கிழமை 11.02.2023 supeedsam.com supeedsam@gmail.com






X உள்ளூராட்சி மன்றத் தேர்தல்– 2023

தலைவர் காட்டிய சின்னம்!
தமிழர் மனங்களில் திண்ணம்!

தமிழ் அரசுக்கட்சி
மட்டக்களப்பு மாவட்டம்


# பாகிஸ்தான் கூட்டுப்படைகளின் பிரதம அதிகாரி ஜனாதிபதியை சந்தித்தார்



மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள பாகிஸ்தான் கூட்டுப்படைகளின் பிரதம அதிகாரி ஜெனரல் சாஹிர் ஷம்ஷாத் மிர்ஸா (Sahir Shamshad Mirza) நேற்று (வெள்ளிக்

02 ஆம் பக்கத்தில்...

## அரசியல் நோக்கத்துக்காக பிரபல்யமடையும் தேவை ஜனாதிபதிக்கு கிடையாது - நிமல் லன்சா



அரசியல் நோக்கத்துக்காக பிரபல்யமடையும் தேவை ஜனாதிபதிக்கு கிடையாது என நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லன்சா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது உரையாற்றிய அவர், பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு நாட்டு மக்கள் அனைவரும் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

ஜனாதிபதியின் பொருளாதார கொள்கைத் திட்டத்தை கடுமையாக விமர்சிக்கும் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் மக்கள் விடுதலை முன்னணியினர் இதுவரை பொருளாதார மீட்சி

02 ஆம் பக்கத்தில்...

## பொலிஸ், காணி அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்க இடமளிக்கப்போவதில்லை

### அத்துரலிய ரத்ன தேரர்!



பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்க இடமளிக்கப்போவதில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## இலங்கையின் சில பகுதிகளில் நிலநடுக்கம்!

புத்தல, வெல்லவாய மற்றும் ஹந்தபனகல பிரதேசங்களில் 3.0 ரிக்டர் அளவில் சிறிய நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் இதுதொடர்பான தகவலினை வெளியிட்டுள்ளது.

இதனால் எந்த ஆபத்தும் இல்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மக்கள் அச்சமடையத் தேவையில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.






## தேர்தலை திட்டமிட்டவாறு நடாத்த நீதிமன்றம் அனுமதி!

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை திட்டமிட்டவாறு நடாத்துமாறு தேர்தல்

02 ஆம் பக்கத்தில்...


"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"

aaDaa Finance 0798000100

Aadaa Finance GmbH

Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt
CEO


Eidgenössische Finanzmarktaufsicht Nr.35302



Fachmann für versicherung & vorsorge
Hauptstrasse 54
6015 Luzern
Switzerland
079 8000 100
arulnages@yahoo.com

finma 34598 25605: cicero


## தடையில்லா மின்சாரத்தைகோரிய மனு நிராகரிக்கப்பட்டது!



உயர்தரப் பரீட்சை இடம்பெறும் காலப்பகுதியில் தடையில்லா மின்சாரத்தை வழங்குமாறு, இலங்கை மின்சாரசபைக்கு உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

குறித்த மனு(வெள்ளிக்கிழமை 10) மேன்முறையீட்டு நீதிமன்றில் அழைக்கப்பட்ட போது இவ்வாறு நிராகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.


MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்

MBZ

கல்வியே துணை

பள்ளித் தலைமைத்தும் பேறெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM

Mathe மகேந்திரா–வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com

MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

# மட்டக்களப்பு மாவட்டத்தில் 21 தேர்தல் முறைப்பாடுகள் பதிவு!



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டதனைத் தொடர்ந்து கடந்த 18.01.2023 ஆந்திகதி முதல் 09.02.2023 ஆந்திகதி நண்பகல் 12.00 மணி வரையிலான காலப்பகுதியில் 21 தேர்தல் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகருமான திருமதி.கலாமதி பத்மராஜா தெரிவித்தார்.

இவற்றில் 19 முறைப்பாடுகள் முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன் இரு முறைப்பாடுகள் நிறைவுறுத்தப்படாமல் உள்ளதுடன், அவற்றுள் மட்டக்களப்பு மாநகரசபை 04, காத்தான்குடி நகரசபை 02, ஏறாவூர் நகர் நகரசபை 05, கோறளைப்பற்று மேற்கு 01, கோறளைப்பற்று பிரதேச சபை 01, ஏறாவூர்ப்பற்று பிரதேச சபை 01, மண்முனைப் பற்று பிரதேச சபை 05, மண்முனை தென் எருவில்பற்று பிரதேச சபை 01 மற்றும் மண்முனை தென் மேற்கு பிரதேச சபை தொடர்பாக 01 முறைப்பாடும் பதிவாகியுள்ளது.

அதே வேளை போரதீவுப்பற்று, மண்முனை மேற்கு, வாகரை ஆகிய உள்ளூராட்சி மன்ற பகுதிகளில் தேர்தல் தொடர்பான எதுவித முறைப்பாடுகளும் குறித்த கால எல்லைக்குள் பதிவாகவில்லையெனவும் தெரிவித்துள்ளார்.

# இலவச கண் பரிசோதனையும் மூக்கு கண்ணாடி வழங்கல் நிகழ்வும்







(ரக்ஸனா)

கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேசசபையின் சமூக அபிவிருத்தி பிரிவினால் ஒழுங்கு செய்யப்பட்ட இலவச கண் பரிசோதனையும் மூக்கு கண்ணாடி வழங்கல் நிகழ்வும் வியாழக்கிழமை (09.02.2023) பிரதேசசபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. பிரதேசசபையின் தவிசாளர் கனகரெட்னம் கமலநேசனின் தலைமையில் சபையின் செயலாளர் சன்முகம் நவநீதன், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் அப்துல்லா ஹாரூன் ஆகியோரின் ஒருங்கிணைப்புடன் மட்டக்களப்பு லிலோ கழகத்தின் அனுசரனையுடன் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது கோறளைப்பற்று, கோறளைப்பற்று மத்தி, கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்தும் 500 இற்கும் மேற்பட்ட தமிழ், முஸ்லிம், மற்றும் சிங்கள் மக்களும் கலந்து கொண்டு பயன்பெற்றனர். இப்பரிசோதனை முகாமில் பார்வை குறைபாடுடையவர்களுக்கு இலவசமாக மூக்குகண்ணாடி வழங்கியதுடன் கண்ணில் வெண்படலம் நோய் கண்டறியப்பட்ட 22 பேருக்கு மட்டக்களப்பு லயன்ஸ் கழகத்தினூடாகசத்திரசிகிச்சைமேற்கொள்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் லயன்ஸ் கழகத்தின் பிராந்தியதலைவர்கே.லோகேந்திரன்மட்டக்களப்பு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக சிரேஷ்ட சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சுரேஷ் றொபட், லியோ கழகத்தின் தலைவர் பிரஷாந்தன் மற்றும் அதன் உறுப்பினர்கள், பிரதேசசபை உத்தியோகத்தர்கள், உள்ளிட்ட பலரும் இதன்ணபோது கலந்து கொண்டிருந்தனர்.

# எமது மக்கள் கோருகின்ற சமஸ்டி தீர்வினைத் தான் நாங்கள் எமது கட்சியின் நிலைப்பாடாக கொண்டிருக்கின்றோம்







(வடமலை ராஜ்குமார்)

இலங்கை சரித்திரத்தில் என்றும் இல்லாதவாறு நாட்டின் தலைவர் ஒருவர் மக்கள் புரட்சியின் பின்னர் துரத்தியடிக்கப்பட்ட பின்னர் நடைபெறுகின்ற முதலாவது தேர்தல் இது.அவ்வாறான முக்கிய நிகழ்வு ஒன்று நடைபெற்ற பின்னர் மக்கள் தமது கருத்துக்களை வாக்குகள் மூலம் தெரிவிக்கின்ற சந்தர்ப்பமாக இத் தேர்தல் நோக்கப்படுகின்றது..என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். இன்று திருகோணமலை வெருகல் பிரதேச சபையில் இலங்கை தமிழரசு கட்சியில் போட்டியிடும் வேட்பாளர்கள் அறிமுகக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

இந்நிகழ்வில் இலங்கை தமிழரசு கட்சியின் திருகோணமலை மாவட்டக்கிளைத் தலைவர் ச.குகதாசன் மற்றும் மாவட்டக்கிளை செயலாளர் க.செல்வராஜா பொருளாளர் வெ.சுரேஸ்குமார் வெருகல கேட்க்கிளை தலைவர் சுந்தரலிங்கம் உட்பட பலர் கலந்திருந்தனர்.

தொடரந்து அவர் உரையாற்றும் போது

தெற்கிலே பல அதிர்வு அலைகளை ஏற்படுத்தும் பல மாற்றங்கள் இந்த தேர்தல் மூலமாக இடம் பெறவுள்ளது என எதிர்



பார்க்கப்படுகின்றது.எனவே மக்களுடைய தீர்ப்பு அவர்கள் அளிக்கும் வாக்குச் சீட்டில் தான் இருக்கிறது

தெற்கிலே எவ்வாறான ஒரு மாற்றம் ஏற்பட்டாலும் வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் நிலைப்பாடான தமது நிலம் தமது பிரதே அதிகாரத்தை தாமே ஆள அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்ற தமிழ் மக்களின் நிலைப்பாட்டிவே அவர்கள் சிறிதளவும் விலக வில்லை. தொடரச்சியாக அவர்கள் அதே நிலைப்பாட்டில் இருக்கிறார்கள் என்பதை இந்த உள்ளூராட்சி மன்ற தேர்தல் கூட வெளிப்படுத்த வேண்டும்.

அதிகாரப் பகிர்வு என்ற பேர்வையிலே மாயாஜால வித்தை காட்டி எங்களை ஏமாற்ற முடியாது.எமது மக்கள் கோருகின்ற சமஸ்டி தீர்வினைத் தான் நாங்கள் எமது கட்சியின் நிலைப்பாடாக கொண்டிருக்கின்றோம்.அதிலிருந்து நாம் ஒரு போதும் இலக மாட்டோம்.என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

# நெதர்லாந்து நாட்டுக்கான இலங்கை தூதுவர் கிழக்கு ஆளுனருக்கிடையில் சந்திப்பு

(ஹஸ்பர்)

நெதர்லாந்து தூதுவர் கிழக்கிற்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளார்

நெதர்லாந்தின் இலங்கைக்கான தூதுவர் ஏஉ ஆணிணடிநு ஏச்ணுஞச்ஞிட மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் ஆகியோருக்கு இடையிலான விசேட சந்திப்பொன்று நேற்று (10) திருகோணமலையிலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இங்கு, இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைமைகள் மற்றும் மாகாணத்தில் புதிய முதலீட்டு வாய்ப்புகள் குறித்தும் தூதுவர் கேட்டறிந்தார்.

கிழக்கு மாகாணம் இயற்கை வளங்கள் நிறைந்த மாகாணம் எனவும் அதில் முதலீடு செய்ய வாய்ப்புகள் அதிகம் எனவும் அங்கு சுட்டிக்காட்டிய ஆளுநர் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புராதன கட்டிட வளாகத்தில்



புதிய வெளிநாட்டு முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்குவது குறித்தும் கேட்டறிந்தார்.

இதன் போது, மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ். ரத்நாயக்க மாகாண வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் ஜே.ஜெகநாதன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## பாகிஸ்தான் கூட்டுப்படைகளின் பிரதம அதிகாரி...

கிழமை) ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினை ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்தார்.

நட்பு நாடுகள் என்ற வகையில் இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலுள்ள நீண்டகால நெருங்கிய உறவை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, ஜெனரல் சாஹிர் ஷம்ஷாத் மிர்ஸா உள்ளிட்ட குழுவினருடன் சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டார்.

இச்சந்திப்பைக் குறிக்கும் வகையில் ஜெனரல் சாஹிர் ஷம்ஷாத் மிர்ஸா, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு நினைவுப் பரிசொன்றையும் வழங்கினார்.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா மற்றும் பாகிஸ்தான் கடற்படையின் ரியர் அட்மிரல் அப்துல் பாஸித் பட் (Rear Admiral Abdul Basit Butt) உள்ளிட்ட பிரதிநிதிகள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## பொலிஸ், காணி அதிகாரங்களை...

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளராகி வெற்றிபெறுவதை இலக்காகக் கொண்டே வடக்கு, கிழக்கில் காணி, பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் ஜனாதிபதி கருத்துக்களை கூறுகின்றார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆனால் எந்த வகையிலும் அவ்வாறான அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்குவதற்கு தாம் இடமளிக்கப்போவதில்லை எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன குறிப்பிட்டுள்ளார்.

## அரசியல் நோக்கத்துக்காக,,,

க்கான கொள்கைத் திட்டங்களை முன்வைக்கவில்லை.

மாறாக, குறுகிய அரசியல் நோக்கத்துக்காக நாட்டை வலம் வந்து தேர்தல் பிரசாரம் செய்துகொள்கிறார்கள்.

உழைக்காமல் எவ்வாறு சொகுசாக வாழ்வது என்பது தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியினர் நாட்டு மக்களுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும்.

மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்கள் வியாபாரம் ஏதும் செய்வதில்லை. தொழில் செய்வதில்லை. ஆனால், சொகுசாக வாழ்கிறார்கள்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க பிறரை 'திருடர்' என விமர்சிக்கிறார். ஆனால், அரசியல் பிரசாரங்களுக்காக கோடிக்கணக்கில் தற்போது நிதியை செலவிடுகிறார்.

நாட்டு மக்கள் தம்மை தெரிவு செய்வார்கள் என்ற நிலைப்பாட்டில் இருந்து கொண்டு மக்கள் விடுதலை முன்னணியினர் தற்போது செயற்படுகிறார்கள்.

அரசியல் பேரணி ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும். கோட்டாபய ராஜபக்ஷவுக்கு முடியாது என்று குறிப்பிட்டோம். ஆனால், நாட்டு மக்கள் அவரை ஜனாதிபதியாக்கினார்கள்.

இறுதியில் நேர்ந்தது என்ன? நாங்களே அடிபட்டோம். ஆகவே, மக்கள் விடுதலை முன்னணியின் போலி பிரசாரங்களுக்கு மக்கள் ஏமாற்றமடையக்கூடாது.

போதைப்பொருள் வியாபாரிகள், பாதாள குழுவினர், சண்டியர்கள், சமூக விரோதிகள் தான் இம்முறை உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணியின் வேட்பாளர்களாக போட்டியிடவுள்ளார்கள்.

மே 9 அன்று வன்முறையில் ஈடுபட்டவர்கள் மக்கள் விடுதலை முன்னணியின் வேட்பாளர்களாக உள்ளார்கள். நாட்டு மக்கள் இவர்களையா தெரிவுசெய்யப் போகிறார்கள். எனத் தெரிவித்துள்ளார்.

## தேர்தலை திட்டமிட்டவாறு...

ஆணைக்குழுவுக்கு உயர்நீதிமன்றம் அனுமதியை வழங்கியுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று (வெள்ளிக்கிழமை) மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. இதன்போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதாக தேர்தல் ஆணைக்குழு ஏற்கனவே உறுதிமொழி அளித்துள்ள நிலையில், உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு அரசாணை பிறப்பிக்க வேண்டிய அவசியமில்லை என உயர் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை தாமதிக்காது நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உத்தரவிட கோரி, ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மனுவொன்றினை தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனு மீதான விசாரணையின் போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# உகந்தமலையில் அமைக்கப்பட்டு வந்த முருகன் சிலை நிர்மாணப்பணி தொடர்ந்து இடைநிறுத்தம்!

## உலக இந்துக்கள் கவலை: தவிசாளர் ஜெயசிறில் விஜயம்!







( வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற உகந்தமலை ஸ்ரீ முருகன் ஆலயத்தில் அமைக்கப்பட்டு வந்த 18 அடி உயரமான முருகன் சிலை நிர்மாணப் பணிகள் தொடர்ந்து இடைநிறுத் தப்பட்டுள்ளன.

வன ஜீவராசிகள் திணைக்களம் இந்த தடை உத்தரவை பிறப்பித்து இருப்பதாக ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திசாநாயக்க தெரிவித்தார்.

குறித்த 18 அடி உயரமான முருகன் சிலை உகந்தமலை சந்நதியில் உள்ள, வள்ளியம் மன் மலையில் அமைந்த வள்ளியம்மன் ஆலயத்தின் பின்புறம் மலையில் அமைக் கப்பட்டு வந்தது.

அத்திவாரம் அமைக்கப்பட்டு பீடம் எழுப் பப்பட்ட நிலையில் இத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முருகன் சிலை நிர்மாணப் பணிகள் இடைநிறுத்தப்பட்ட சம்பவமானது, உல கெங்கிலுமுள்ள இந்துக்களின் மனங்களை புண்படச்செய்துள்ளன.

இதனால் அவர்கள் வேதனையும் விரக்தியும் அடைந்துள்ளனர்.

சம்பவத்தை கேள்வியுற்ற பிரபல சமூக செயற்பாட்டாளரும், காரைதீவு பிரதேச சபை தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் நேற்று முன்தினம் ஸ்தலத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டார்.

ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திசாநா யக்க வைச் சந்தித்து கலந்துரையாடினார்.

ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திசாநா யக்க கூறுகையில்...

கடந்த ஏப்ரல் மாதமளவில் வள்ளிஅம் மன் மலையில் வள்ளியம்மன் ஆலயத்திற்கு பின்னால் 18 அடி உயரமான முருகன் சிலை அமைப்பதற்கு அடிக்கல் நட்டு நிர்மாணப் பணிகள் ஆரம்பமானது. இருந்த போதிலும் ஜூலை மாதமளவில் பணியை நிறுத்துமாறு வனஜீவராசிகள் திணைக்களம் அறிவித்தது.

ஆரம்பத்தில் மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளின் அனுமதி பெறப் பட்டது.

தற்போது கொழும்பு தலைமையகத்தில் இருந்து இத் தடை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசா, அம்பாறை மாவட்ட அபிவிருத்தி குழு தலைவர் வீரசிங்க எம்.பி., மட்டக்களப்பு மாவட்ட தலைவர் சந்திரகாந்தன் எம்.பி. போன்ற அரசியல்வா திகள் இங்கு வந்தபோது முறையிடப்பட்டி ருக்கின்றது .

இது தவிர நான் அரசாங்க அதிபர் தொடக் கம் வனஜீவராசிகள் திணைக்கள பணிப் பாளர் வரை சென்று முறையிட்டுள்ளேன். இதற்கான அனுமதி விரைவில் கிடைக்கப் பெறும் என்று நம்புகின்றேன்.

தவிசாளர் ஜெயசிறில் அங்கு கருத்துரைக் கையில்....

இற்றைக்கு 2000 வருடங்களுக்கு முற்பட்ட இந்த ஆலயம் மலைகளாலும் மரங்களாலும் சூழப்பட்ட ஒரு பழமை யான ஆலயம் .ஆலய வளாகத்தில் உள்ள வள்ளியம்மன் மலையில் முருகன் சிலை அமைக்கப்பட்டு வந்தது .என்ன காரணத் துக்காக இது நிறுத்தப்பட்டதோ தெரியாது.

ஆனால் ,இந்த செயல் முழு இந்துக்களின் மனங்களையும் புண்பட செய்திருக்கின் றது .இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மிக விரைவாக அனுமதியை வழங்கி இந்த செயற்பாட்டை முன் எடுத்துச் செல்ல உத வும் வேண்டும்.

அண்மையிலே இந்தியாவில் ராஜஸ் தானிலே 368 அடி உயரமான உலகின் மிகப்பெரிய சிவன் சிலையை அமைத்து அழகு பார்த்தார்கள். எமது நாட்டிலும் உன்னஸ்கிரிய தொடக்கம் நாட்டின் பல பாகங்களிலும் மிக உயர்ந்த புத்தர் சிலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன .

ஆனால், இங்கு ஆலய வளாகத்துக்குள் ,அதுவும் ஆலயமருகே எழுப்பப்பட்ட இந்த சிலை நிருமாணம் நிறுத்தப்படுவ தற்கான காரணம் என்னவென்று தெரிய வில்லை .பல அரசியல்வாதிகள் சந்தித் ததாக வண்ணக்கர் கூறினார். அவர்களது முயற்சியும் எனது முயற்சியும் சேர்ந்து நல்லதொரு தீர்வை பெற நடவடிக்கையை மேற்கொள்வோம். என்றார்.

# சம்மாந்துறை பிரதேச சபையின் புதிய உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம்





(அஸ்ஹர் இப்றாஹிம்)

சம்மாந்துறை பிரதேச சபையின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் புதிய உறுப்பினர்களானா ஏ.ஏ.சி.எம். நிஷாம், ஏ.எம்.நபீல், எம்.ஏ.தம் பிக்கண்டு ஆகியோர்கள் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் சம்மாந்துறை தொகுதி அமைப் பாளரும், சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினருமான ஐ.எல். எம்.மாஹிர் அவர்களின் முன்னி லையில் இன்று வியாழக்கிழமை சத்தியப்பிரமாணம் செய்து பதவி யேற்றுக் கொண்டார்கள்.

இந்நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச

சபை உப தவிசாளர் ஏ.அச்சு முஹம்மட், சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட், சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர்களான ஏ.எம். எம்.றியாஸ், ஏ.எல்.எம்.ஜிப்ரி கட்சியின் முக்கியஸ்தர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற் றிருந்தனர்.

# கப்பலும் வேண்டாம்; படகும் வேண்டாம் ! வீடு ஒன்றே போதும் என்கிறார் சாணக்கியன்

(வி.ரி. சகாதேவராஜா)

கடந்த தேர்தலில் அம்பாறை மாவட் டத்திற்கு கப்பலை ஒருவர் வாடகைக்கு எடுத்து வந்தார் .இம்முறை அதனை மட்டக்களப்பில் ஒருவர் வாடகைக்கு எடுத்திருக்கிறார். ஆனால் ஆம்ப்பா றையில் இம் முறை கப்பலுக்கு பதி லாக படகு வந்திருக்கிறது. கப்பலும் வேண்டாம்; படகும் வேண்டாம். வீடு ஒன்றே போதுமானது.

இவ்வாறு காரைதீவில் இடம்பெற்ற இலங்கை தமிழரசுக் கட்சி வேட் பாளர்களுக்கான அறிமுக கூட்டத்தில் உரையாற்றிய மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக் கியன் தெரிவித்தார் .

அவர் அங்கு மேலும் தெரிவிக்கை யில்.. தமிழரசுக் கட்சி ஒன்றுதான் தமி ழருக்கான ஒரே கட்சி. தமிழருக்கான அரசு. கடந்த 75 வருட காலமாக வீட்டு சின்னத்தில் தொடர்ச்சியாக தமிழ் மக்க ளுக்கு குரல் கொடுத்து அவர்களுக்காக தேசியத்திற்காக வாழ்ந்து வருகின்ற ஒரே ஒரு கட்சி தமிழரசுக் கட்சி .

கட்சியின் வர்ணத்துடனான இந்த ச ால்வைத்துண்டை எமது கட்சி ஒன்று தான் தொடர்ந்து அணிந்து வந்துள்ளது. ஏனைய பல கட்சிகளுக்கு அது தூக்குக யிறாக மாறியிருக்கிறது.

கடந்த தேர்தலுக்கு கப்பலிலே வந் தவர்கள் அத் தேர்தல் முடிந்தவுடன் மாயமாகி மறைந்தார்கள். இன்று வரை காணவில்லை.

அதேபோல் இன்று மட்டக்களப் பில் பாரிய சூழ்ச்சி நடக்கின்றது. மண் மாமியாக்களுக்கும் அமைச்சருக்கும் இடையே இரவுசந்திப்புகள் நடக்கின்



றன. பகலில் வேறு வேஷம். மக்களே ஏமாந்து விட வேண்டாம். அவர்களால் ஒரு சபையை கூட வெல்ல முடியாது. வடக்கு கிழக்கில் தமிழரசு ஒன்றே அர சமைக்கும். என்றார்.

# திருகோணமலை "யாவும் ஆனந்தமே" கவிதைநூல் வெளியீட்டு விழா...!

(அ . அச்சுதன்)

எதிர்வரும் 12.02.2023 காலை 10.00 மணியளவில் திருக்கோணமலை நகராட்சி மன்ற பொது நூலக கேட்போர் கூடத்தில் கங்குவேலியைச் சேர்ந்த இளம் எழுத்தாளர் அஷ்வினி வையந்தியின் ஜீவ நதி வெளியீடான ‘யாவும் ஆனந்தமே’ கவிதைநூல் வெளியீட்டு விழாவானது நடைபெறவுள்ளது.

இவ் நூல்வெளியீட்டினை திருக்கோ ணமலை அன்பின் பாதையின் எண்ணம் போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றம் ஏற்பாடு செய்துள்ளது.

மன்றத்தின் தலைவர் கனக.தீபகாந் தனின் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் முதன்மை அழைபபாள ராக கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் மொழித்துறைத் தலைவர், பேராசிரியர் செ.யோகராசா கலந்து சிறப்பிப்பதுடன் மதிப்பிற்குரிய அழைப்பாளர்களாக திருக் கோணமலை முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.ஒ.குலேந்திரன் அவர் களும் ஓய்வுநிலை அதிபரும் கவிஞரு மாகிய திரு க.யோகானந்தன் அவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நூல் அறிமுகத்தினை கவிதாயினி




பாலையூற்று அஷ்ரபா நூர்தீன் வழங்க நூல் நயவுரைதனை கவிஞர் சம்பூர் வதன ரூபனும் ஆற்றவுள்ளனர்.

அன்பின் பாதை நிர்வாகி றொசில்டா அண்டோவின் ஒருங்கிணைப்பில் நிகழ்வை ராவணத் தமிழச்சி தொகுத்து வழங்கவுள்ளார்.

# மன்னார் திருக்கேதீஸ்வரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்கள் 8 மாதங்களுக்குள் பரிசோதிக்கப்படும்

(தலைமன்னார் நிருபர் வாஸ் கூஞ்ஞ)

மன்னார் திருக்கேதீஸ்வரம் மனித புதை புதைகுழியில் கண்டுபிடிக்கப் பட்ட 81 பெட்டிகளில் உள்ளடக்கப் பட்டுள்ள மனித எச்சங்கள்; பரிசோத னைக்கு உட்படுத்த எட்டு மாதங்கள் நடைபெற வேண்டும் என வைத்திய குழாம் மன்றில் முன்வைக்கப்பட்டதை மன்று கட்டளையாக்கியுள்ளது.

மன்னார் திருக்கேதீஸ்வரப் பகுதியில் 2013 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழி வழக்கானது அனுரா தபுர நீதவான் நீதிமன்றில் அழைக்கப் பட்டு கண்டுபிடிக்கப்பட்ட மாதிரி மனித எச்சங்களை அமெரிக்கா புலோரிடா நிறுவனத்துக்கு காபன் பரிசோதனைக் காக கொண்டு செல்வதற்கு மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் இவ் வழக்கு வியாழக்கிழமை (09) மன் னார் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி கே.எல்.எம்.சாஜித் முன்னலையில் விசா ரனைக்கு எடுக்கப்பட்டது.

ஏற்கனவே ஜனவரி மாதம் 09ந் திகதி (09.01.2023) அநுராதபுரம் வைத்தியசா லையில் பாகாப்பு நோக்கி வைக்கப்பட் டிருந்த மன்னார் திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழியில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்கள் கொண்ட 81 பெட்டிகளி லிருந்து இதில் 5 பெட்டிகளில் மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டிருந்தன.

இவைசகள் அனுராதபுரம் நீதவான் நீ திமன்ற காப்பகத்தில் வைக்கப்பட்டிருந் தன. இந்த சான்று பொருட்களை உரிய நடைமுறைகளைப் பின்பற்றி மன்னார் நீ தவான் நீதிமன்ற காப்பகத்துக்கு சேர்பிக் கும்படி குற்ற புலனாய்வு பிரிவினருக்கு



கட்டளை ஒன்று ஆக்கப்பட்டிருந்தது.

அத்தோடு ஒன்றிலிருந்து முப்பது வரைக்கான பெட்டிகள் ஏற்கனவே இதற்கு பொறுப்புவாய்ந்த சட்டவைத் திய அதிகாரியினால் கொழும்புக்கு எடுத் துச் செல்லப்பட்டுள்ளன.

அவைகளையும் பரிசோதிக்கும் நடவ டிக்கைகள் இடம்பெற இருக்கின்றது. இதற்கும் காணாமல் போனோர் உறவி னர்கள் சார்பில் மன்றில் ஆஜராகிவரும் சட்டத்தரனிகள் பங்குபற்றுவதற்கும் கட்டளை ஒன்று ஆக்கப்பட்டுள்ளது.

இந்த எழும்புகளிலிருந்து வயது , பால் போன்ற இறப்பகளுக்கான காரணம் போன்ற விடயங்கள் ஆய்வுக்கு உள்ளாக் கப்படும் என்றும்

இந்த மனித எச்சங்கள் கொண்டுள்ள 81 பெட்டிகளும் பரிசோதனைக்கு உட் படுத்த எட்டு மாதங்கள் நடைபெற வேண்டும் என்றும் இது தொடர்பான வைத்திய குழாவினர் மன்றில் தெரியப் படுத்தியிருந்தனர்.

இதன் அடிப்படையில் இவ்வாறான கட்டளைகள் இன்றைய (09) இவ் வழக்கு விசாரனையில் ஆக்கப்பட்டுள்ளது.

இவ் வழக்கு மேலதிக நடவடிக்கை களுக்காகவும் நடவடிக்கை அறிக்கைக ளுக்காகவும் எதிர்வரும் சித்திரை மாதம் மூன்றாம் திகதி (03.04.2023) அன்று மீண்டும் மன்னார் நீதவான் நீதிமன்றில் அழைக்கப்படும் என கட்டளையிடப் பட்டுள்ளது.

இவ் வழக்கின்போது இன்றையத் தினம் குற்ற புலனாய்வு பிரிவினரைச் சேர்ந்த பண்டார மற்றும் மனோச் ஆகி யோரும் சட்டவைத்திய அதிகாரி டீ.எல். வைத்தியரத்தின மற்றும் ஹேவகேவும்

மேலும் காணாமல் போனோர் குடும் பங்களின் சார்பில் சிரேஷ்ட சட்டத்ரனி றனித்தா ஞானராஜாவுடன் சிரேஷ்ட ச ட்த்தரனி வி.எஸ்.நிரஞ்சன் இவர்களு டன் காணாமல் போனோர் அலுவலகம் சார்பில் சட்டத்தரனியும் ஆஜராகி இருந் தனர் என காணாமல் ஆக்கப்பட்டவர் களின் பாதிக்கப்பட்ட உறவினர்கள் ச ார்பாக இவ் வழக்கில் முன்னிலையாகி வரும் சிரேஷ்ட சட்டத்தரனி; வீ.எஸ். நிரஞ்சன் ஊடகங்களுக்கு இவ்வாறு தெரிவித்தார்.

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயப் பகுதியிலிருந்து மாந்தை பகுதிக்கு நிலத் தடியின் ஊடாக குழாய் மூலம் குடிநீ ர் வழங்கும் திட்டத்தில் ஆலய வீதிக்கு அருகாமையில் 2013 ஆம் ஆண்டு நீர் வழங்கல் சபையினால் குழாய்கள் பதித் துச்சென்றபோதே இவ் மனித புதைகுழி கண்டு பிடிக்கப்பட்டு கண்டுபிடிக்கப் பட்ட மனித எச்சங்கள் 81 பெட்டிகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# சுவிஸ் சூக் அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய

# மஹா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா

வானப்புறு தேசமாகிய சுவிஸ் ஸார்லாந்து தேசமதில். செல்வச செழிப்பு மிகு மானிலமாகிய, சூக் மானிலத்தில் ,விக்கினங்கள் தீர்க்கும் விநாயகராக சித்திவிநாயகர் கோவில் கொண்டு , கிட்டதட்ட 28 ஆண்டு காலமாக அருள்பாலித்து வருகிறார் .

சூக் மானிலத்தில் 1995 ம் ஆண்டு காலப்பகுதிகளில் வாழ்ந்த , ஈழத்து சைவப் பெருமக்களின் பெருமுயற்சியால் , தங்களின் ஆன்மீக தேவையைப் பூர்த்தி செய்வதற்காக 15.9.1995 அன்று Langgasse 47, 6340 Baar என்னும் இடத்தில் ,ஆரம்பிக்கப்பட்டு , ஆவர்த்தன மஹா கும்பாபிஷேகம் செய்யப்பட்டு ,அடியவர்களால் வழிபடப்பட்டு வந்தது .

இதன் போது 10.9.2000 த்தில் ஆலயம் இடமாறவேண்டிய சூழல் ஏற்பட்டது . இதனால்Haldenstrasse 5 , 6340 என்னும் முகவரிக்கு மாற்றப்பட்டு , 22.8.2001 இரண்டாவது மஹா கும்பாபிஷேகம் இடம்பெற்றது .

மீண்டும் ஆலயம் சூழ்நிலை கருதி இடம் மாறவேண்டிய சூழல் ஏற்பட்ட போது , 01.11.2015 இல் Bosch 43, 6331 Hnenberg என்னும் இடத்தில் மாற்றப்பட்டு , அடியவர்களால் உள்ளக கற்கோயிலாக அமைக்கப்பட்டு , பஞ்சலோக விக்கிரகங்கள் பிரதிஷ்டை பண்ணப்பட்டு ,

3.9.2017 அன்று மஹா கும்பாபிஷேகம் நிகழ்தப்பட்டது .

இதனைத் தொடர்ந்து , இந்த ஆலயத்தில் நித்திய , நைமித்திய கிரிகைகள் சிறப்புற நிகழ்ந்து வந்தன . குறிப்பாக பலராலும் சிறப்பாக பேசப்படும் வருடாந்த திருவிழா பல்வேறு அம்சங்களையும், தன்னகத்தே கொண்டு வழிபடப்பட்டு வந்தது .

கப்பல் திருவிழா , மாம்பழத்திருவிழா என ஈழத்து மரபில் பூசிக்கப்பட்ட மரபுகள் , அவ்வாறே சூக் சித்திவிநாயகர் ஆலயத்திலும் உற்சவம் நிகழ்த்தப்பட்டு வழிபடப்பட்டு வந்தது .

அத்தோடு தைப்பொங்கல் விழா, அதனை ஒட்டிய சிறார்களுக்கான சைவசமயப் போட்டிகள் பலவும் இடம்பெற்று வந்தது .

ஆலயம் என்பது வெறும் ஆன்மீகத்திற்கான இடம் மட்டுமல்ல, அது ஒரு சமூக நிறுவனம் என்ற வகையில், புலத்திலும் தாயகத்திலும் வாழும் சமூகத்தினை இணைக்கும், ஒரு அமைப்பாக இயங்கி வருகிறது . சித்தி விநாயகர் அறக்கட்டளை மூலம் பல அரிய பணிகளை தாயகத்தில் நலிவடைந்த மக்களுக்குச் செய்து வருகிறார்கள் .

இத்தகைய நிலையில் 2021 ம் ஆண்டு ஆலய தர்மராசா சுதாகர் தலைமையிலான, செ.தேவசீலன் , குக இளங்கோ , ம.ரஞ்சன் , து. சாந்தருபன் , க.சாந்தன் , கு.அனுசியா, ச.அனுசா , த.கௌளி , பி.சுகந்தி , முதலானவர்களைக் கொண்ட நிர்வாக சபையில் , ஆலய குரு. பிரதமகுரு ஆகியோரின் கோரிக்கைக்கு அமைய உடைந்த மூர்த்தங்கள் , மற்றும் உள்ளக சில புனருத்தாரங்கள் என்பவற்றை செய்ய வேண்டும் என , 2021.3.20 அன்று இடம்பெற்ற பொதுமக்கள் கருத்தறியும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது .

அதன் நிமித்தம் மேற்படித் திருப்பணிவேலைகளை ஒழுக்கமைக்கவும் , அவை தொடர்பான தரவு திரட்டவும்,அன்றைய நிர்வாக சபையினரால், நிர்வாகசபை சார்பில் குறித்த நிர்வாக சபையில் இடம்பெற்ற திரு சாந்தன் , திருமதி அனுஷா ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

அதன் நிமித்தம் குறித்த இருவரும் மேற்படி திருப்பணி வேலைகளை ஆரம்பிக்கும் வேளையில் , இவற்றை திறம்பட மேற்க்கொள்ள வேண்டுமாயின் ஒரு கட்டமைப்பு அவசியம் என உணரப்பட்டது .

அதன் நிமித்தம் ஆலய அடியவர்களில் இருந்து,ஒரு உபகுழு ஒன்று அமைக்கப்பட்டது.

அதில் பி.சுகந்தி , ச ச்சிதானந்த மூர்த்தி , சாந்தகுமார்,சாந்தரூபன், ரவிக்குமார் , குக இளங்கோ , ந்நதகுமார் , த. கௌளி , ஶ்ரீ. அனுசியா, ச. அனுஷா, ஶ்ரீகரன், ஜெயராசன், பா. தயா என்போர் உள் அடங்குவர் .

இந்த புனராவரதன குழு ஆலய அடியவர்கள் மத்தியிலிருந்து பெருந்தொகைப் பணத்தை நன்கொடையாக பெற்று,பல்வேறு பட்ட திருப்பணி வேலைகளைக் மேற்க் கொண்டு வந்தார்கள்.





மேற்படி கும்பாபிஷேக நிகழ்வில் கணிசமான வகிபாகம் புனராவர்ததன குழுவுக்கு உண்டென்றால், அதனை யாரும் மறுக்கமாட்டார்கள்.

வருடாந்தம் இடம்பெறும் பொதுக்கூட்டங்களில் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்ட போதும் , இந்த புனராவர்தத்தன குழுவின் செயற்பாடுகளுக்கு ஊக்கமூட்டப்பட்டது .

இந்தக் குழுவுக்கு பதவிவழியாக குறித்த ஆலயபரிபாலன சபையின் கௌரவ செயலாளர் அவர்களும் ,சில சந்தர்ப்பத்தில் பொருளாளர் அவர்களும் இணைப்பாளராக பங்காற்றினார்.

2021 இல் தேர்வு செய்யப்பட்ட சுதாகர் அவர்களைத் தலைவராகவும் து. சாந்த ரூபனைத் செயலாராகவும், பாலசிங்கம் அவர்களை பொருளாளராகவும் கொண்ட நிர்வாகசபையும் புனராவர்தத்ன குழுவோடு இணைந்து திருப்பணிகளை செய்தது.

இதன் பயனாக புனராவர்தன குழு பல்வேறு செயற்திட்டங்களை செய்வதற்காக ஆலோசனைக் கூட்டங்கள் பலவற்றை நடாத்தி, அடியவர்களின் ஆலோசனைகளைப் பெற்று , இந்தக் கருமங்களில் , ஆலய நிர்வாக சபையோடு இணைந்து முன்னெடுத்து வந்தது.

அந்த வகையில் ஆலயதிற்க்கு பிரதிஷ்டை பண்ணுவதற்காக தமிழகத்தைச் சேர்ந்த பிரபல சிற்பாசாரியார் இரவிசங்கர் மற்றும் ஜெர்மனியில் வதியும் லம்போஸ் ஆகியோரின் கைவண்ணத்தில் உருவான அழகிய பஞ்சலோக தெய்வ விக்கிரகங்கள் தமிழகத்தில் இருந்து பிரதிஷ்டை செய்வதற்காக கொண்டுவரப்பட்டுள்ளன .

கலாதரிசனம் மிக்க அழகிய பஞ்சலோக விக்கிரகங்கள் அடியவர்களின், பங்களிப்போடு அவை தருவிக்கப்பட்டுள்ளன .

ஆலய உள்ள கட்டுமானங்களில் சில திருத்தங்கள் , ஆலய அடியவர்களால் மேற்க்கொள்ளப்பட்டுள்ளன.

உள்ளக கட்டுமான செயற்பாடுகளில் ஆலய அடியவர்களான திரு. பாஸ்கரன் ,ஜெயராசன் , சுஜீவன் ஆகியோரின் பணியும் குறிப்பிடத்தக்கது.

இன்னிலையில் ஆலயத்தின் 2022 ம் ஆண்டுக்கான சி.சிவபாதம் அவர்களை தலைவராக கொண்ட, சிவநேசன் இளங்கோ, பைரவி கிருபாகரன், சுதாகர், குக இளங்கோ, பாஸ்கரன், காண்டீபன், ந ந்தகுமார், உள்ளடங்கிய நிர்வாகசபை மற்றும் புனராவர்த்தன குழு ஆகியவற்றின் கூட்டுப்பொறுப்போடு 12.2.2023 அன்று மஹா கும்பாபிஷேகம் நிகழ திருவருள் கூடியுள்ளது.



8.2.2023 அன்று புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு விநாயகர் வழிபாட்டோடு ஆரம்பமாக உள்ள இந்த கிரிகைகளுக்கு ,பிரதிஷ்டா குருவாக சிவாகசிரோன்மணி சிவஶ்ரீ ஶ்ரீ.சோமஸ்கந்தக்குருக்கள் ஆ.குஞ்சி அவர்கள் தலைமை ஏற்க்கின்றார்.அவருக்கு இணையாக தேவஸ்தான குரு சிவ ஸ்ரீ சிவாகம கிரியாஜோதி பத்மநாப பாஸ்கரக் குருக்களும் அவர்களும் பங்கேற்கிறார்கள் .

இலங்கையில் உள்ள வேதாக விற்பன்னர் சர்வதேச இந்து மத குருபீடாதிபதி,சிவாகமகலாநிதி சிவஶ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சார் அவர்கள் ஈழத்தில் இருந்து வருகை தந்துள்ளார்.

ஐரோப்பிய தேசங்களில் இருந்து வேதாகம விற்பனர்களான பல சிவாச்சாரியப் பெருமக்கள் பங்கேற்கிறார்கள் .

8.2.2023 புதன்கிழமை ஆரம்பமாகவுள்ள கிரிகைகளைத்தொடர்ந்து, 9.2 . 2023 அன்று திருவிளக்குப் பூசைகளும் , 10.2.2023 அன்று விக்கிரஸ்தாபனமும், 11.2.2023 அன்று, பிரதிஷ்டை செய்யபடவுள்ள விக்கிரகங்கள் பஞ்சலோக விக்கிரகங்களாக இருப்பதனால் அடியவர்கள் பால்காப்பு சாத்தும் , நிகழ்வும் இடம்பெறவுள்ளது .

அதனைத் தொடர்ந்து 12.2.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று மஹா அபிஷேகமாகிய மஹா கும்பாபிஷேகம் இடம்பெற, தெய்வ அனுக்கிரகம் கூடியுள்ளது இறை சாந்நிநித்தியம் நிறைந்திருக்கிறது.

சுவிஸ் நாட்டிலேயே தமிழ் சிறார்களின் கல்வி வளர்சியில் உன்னதம் பெற்ற மானிலத்தில் மிக முதன்மையானது சூக் மானிலம்.

இந்த மானிலத்தில் உள்ள தமிழ்ப் பாடசாலைகள் , தாய்மண் விளையாட்டுக்கழகம் , கலைகலாசார மன்றம், கத்தோலிக்க மன்றம் போன்ற பல்வேறு தமிழர் அமைப்புக்களால் , இளைய சமுதாயத்தினர் மத்தியில் பலவேறு பட்ட அறிவு ஜீவிகள் சிருஷ்ஷிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அத்தகைய இளையவர்களின் பெரும் பங்களிப்போடும் , புனராவர்தன குழுவின் பங்கேற்றலோடும் , வினைத்திறன் மிகுந்த பரிபாலன சபையின் பங்கேற்போடும் , அடியவர்களின் அர்ப்பணிப் போடும் , எதிர்வரும் பல ஆண்டுகள் கழித்து வரும் கும்பாபிஷேகமானது , ஒரு நிரந்தர இடத்தில் , நிரந்தர ஆலயம் அமைத்து , கருங்கல் விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யும் அனைவரினதும் பெருங்கனவு மெய்ப்படவேண்டும் .

சூக் வாழ் தமிழர்கள் தாயகத்தில் போர் நிகழ்ந்த வேளையில் பெருந்தொகைப் பணத்தினை வழங்கிய ஈகை எண்ணம் கொண்டவர்கள்.சூக் வாழ் சைவ அடியார்களால் , நிரந்தர ஆலயம் அமைப்பது சிரமானது காரியம் அல்ல . அதற்க்குரிய முயற்சியை , சரியான பொறிமுறையை அமைத்து செயற்பட முன்வரவேண்டும்.

புலம்பெயர் தேசத்தில் ஆலயங்கள் என்பது வெறும் ஆன்மீகத்திற்கான இடமல்ல. கோயில்களை அடிப்படையாக கொண்டே ,தமிழர்களின் வரலாறு , தமிழர்களின் மொழி , தமிழர்களின் பண்பாடு, தமிழர்களின் கலை என்பன பேணிப் பாதுக்கப்படுகிறது .

அந்த வகையில புலம்பெயர் முதல் சந்ததியினராகிய நாம் , எமது இன அடையாளத்தை அடுத்து வரும் எமது வாரிசுகளுக்கு வழங்க வேண்டுமாயின் , நிரந்தர ஆலயம் ஒன்று அமைப்பது அத்தியாவசிமானது. என்பதனையும் கரிசனைக்கு உட்படுத்தி, இடம்பெறும் மஹா கும்பாபிஷேகத்தில் அனைத்து அடியவர்களும் பங்கேற்று , விநாயகப் பெருமானின் இஷ்ட சித்திகளைப் பெற்று உய்யும் வண்ணம் வேண்டப்படுகிறீர்கள்.

இன்பமே சூழ்க !எல்லோரும் வாழ்க !



# கிராமங்களில் கட்சியென்று மக்களை பிரித்தாளும் அரசியல் கட்சினருக்கு சங்கு ஊதப்படுகின்றது

( வாஸ் கூஞ்ஞ )





தமிழர் கட்சிகள் பிரிந்து நின்று தமிழர் நலன் கருதாது தங்கள் கட்சிகள் வளர்ந் தால் தாங்கள் வளர்ந்தால் போதும் என்ற நிலைக்கு வந்த நிலையில் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மன்னார் பிரதேச சபைக்குட்பட்ட சில கிராம மக்கள் ஒன்றுதிரண்டு சுயேட்சையாக களம் இறங்கியுள்ளது.

இதன் வேட்பாளர் அறிமுக விழாவும் பேசாலையில் இதற்கான அலுவலகமும் திறந்து வைக்கப்பட்டபோது இது தொடர்பாக இங்கு ஒருசிலர் உரையாற்றும்போது கருத்துக்கள் தெரிவிக்கையில்

நாம் கடந்த காலத்தில் பாரம்பரிய கட்சி என அவர்களுக்கு எமது ஆதரவுகளை வழங்கி ஈற்றில் ஏமாற்றப்பட்டவர்களாக ஆகிவிட்டோம்.

எம்மில் பலர் இன உணர்வோடும் பணத்துக்காகவும் மதுவுக்காகவும் ஏமாற்றப்பட்ட ஒரு இனமாக நாம் இருக்கின்றோம்.

இந்த உள்ளூராட்சி மன்ற தேர்தல் மூலம் நாம் ஒரு அரசியலை மாற்றுபவர்கள் அல்ல. மாகாண சபையை மாற்றி அமைப்பவர்களும் அல்ல.

ஆனால் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் மக்கள் நலன் நோக்காது தங்கள் சுயநல போக்கில் செயல்பட்டுள்ளனர். இவற்றுக்கெல்லாம் சங்கு ஊதும் ஒரு தேர்தலை சந்திக்கப் போகின்றோம்.

இதற்காக இங்கு பாராம்பரியமாக இருந்த தமிழ் உணர்வாளர்கள் , தமிழ் தேசியம் , தமிழர் உரிமை , தமிழர் விடுதலை போன்ற கோட்பாடுகளுடன் இருக்கும் எந்த கட்சியையும் நாம் விமர்சிப்பவர்களும் அல்ல.

ஆனால் எமது பிரதேசத்தை கட்சி என்ற ரீதியில் அல்லாது சுயேட்சை என்ற ரீதியிலேயே ஒன்றுபட்ட சமூகமாக நாம் இவ் தேர்தலை சந்திக்கப் போகின்றோம்.

பேசாலை கிராமம் மாவட்டத்தில் ஒரு பரந்த சனத்தொகை கொண்ட கிராமம். ஆனால் நாம் கடந்த தேர்தலில் கூடிய ஆசனத்தைப் பெற்றபோதும் எம்மால் ஆட்சிப் பீடம் ஏறமுடியவில்லை.

இவ் பகுதியில் ஆட்பலம் உண்டு. அறிஞர்கள் படித்தவர்கள் குறிப்பாகச் சொல்லப் போனால் இந்த பேசாலையில் என்னதான் இல்லை.

ஆனால் ஒரு சரியான பஸ் தரிப்பிடம் இல்லை. சரியான சந்தை இல்லை. இதெல்லாம் யார் செய்ய வேண்டியது? நாம் முன்பு தேர்ந்தெடுத்தவர்கள் செய்திருக்க வேண்டும்.

மேலும் இந்த பகுதியில் கனியவள மணல் அகழ்வு காற்றாலை எல்லாம் இந்த மக்களின் எதிர்ப்புக்கு மாறாக இந்த பிரதேசசபையின் ஆசீருடனோ அல்லது ஆசீர் இன்றியோ அரங்கேற்றப்பட்டுள்ளது.

ஆகவே நாம் ஒன்றுபட்ட சமூகமாக சுயேட்சை என்ற சங்கு சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெறுவதன் மூலம் பாரம்பரிய கட்சிகள் என்று எம்மை ஏமாற்றியவர்களுக்கு ஊதுகின்ற சங்காக இருக்க வேண்டும்.

கடந்த காலத்தில் இந்த அரசியல் கட்சிகள் எல்லாம் எம்மையே பிரித்து குளிர் காணந்துள்ளனர். ஆனால் நாம் இப்பொழுது வெற்றியீட்டி விட்டோம். ஏனென்றால் எமது ஒருசில ஊர்கள் இப்பொழுது ஒன்றுபட்டு இவ் தேர்தலை சந்தித்தள்ளது.

ஆகவே எமது தேர்தல் சின்னமாக வழங்கப்பட்டிருக்கும் சங்கு அரசியல் கட்சிகளுக்கு ஊதும் சங்காக அமையட்டும் என இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

# கணபதி கனகராஜ் எச்சரிக்கை

தலவாக்கலை பி.கேதீஸ்

தோட்டத் தொழிலாளர்கள் பறிக்கும் தேயிலை கொழுந்தின் நிறையை குறைத்து அளவீடு செய்து தொழிலாளர்களின் உழைப்பை சுரண்டுவதை பொகவந்தலாவ பெருந்தோட்ட கம்பனி உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டும் என இலங்கை தொழிலாளர் காங்கிரசின் பிரதி தலைவர் கணபதி கனகராஜ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த வாரங்களில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உயர் பீட முடிவுக்கு ஏற்ப பல தோட்டத் தொழிலாளர் சந்திப்புகளை நடத்தி இருந்தோம். இதன் போது பொகவந்தலாவ பெருந்தோட்ட நிறுவனம் தோட்டத் தொழிலாளர்களிடமிருந்து அதிகளவான கிலோ தேயிலை கொழுந்துகளை கழித்துக் கொண்டே நிறையை பதிவு செய்வதாக முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது. இந்த தொழிலாளர்கள் சந்திப்பு குறித்தும் அவர்கள் தெரிவித்த குறைபாடுகள் தொடர்பாகவும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு வந்தோம். அத்துடன் இது தொடர்பான முறைப்பாட்டை இலங்கை நிறுத்தல் அளத்தல் திணைக்களத்திற்கும் தெரிவித்திருந்தேன். பொகவந்தலாக பெருந்தோட்ட நிறுவனம் பயன்படுத்துகின்ற தேயிலை கொழுந்து அளவீடு செய்யும் தராசு நவீன டிஜிட்டல் முறையை கொண்டதாகவும் அந்த தராசை கையடக்க தொலைபேசி மென்பொருள் ஊடாக இயக்கக்கூடியதாகவும் அமைந்திருக்கிறது. இதனால் நிறுவையை தேவைக்கேற்ப கூட்டிக் குறைத்துக் கொள்வதற்கான வாய்ப்பு தோட்ட முகாமைத்துவத்துக்கு இருக்கிறது. இதனால் தோட்டத் தொழிலாளர்கள் பெருமளவு வருமானத்தை இழந்து வருகின்றனர்.

தோட்ட நிர்வாகத்தின் இம் முறை



கேடான நடவடிக்கையை முடிவுக்கு கொண்டு வரும் பொருட்டு இலங்கை நிறுத்தல் அளத்தல் திணைக்கள அதிகாரிகளுடன் எவ்வித முன்னறிவித்தலுமின்றி பொகவந்தலாவ தோட்ட மேற்பிரிவில் தேயிலை கொழுந்து நிறை இடப்பட்டுக் கொண்டிருக்கும் இடத்தில் இடை நடுவில் புகுந்து நிறுத்தல் அளத்தல் அதிகாரிகளினால் பரிசீலனை மேற்கொள்ளப்பட்டது. இதன் போது முறையாக லைசன்ஸ் பெறப்படாத அளவீட்டு கருவி பயன்படுத்தப்பட்டதும், ஒவ்வொரு தொழிலாளியிடம் இருந்தும் ஒரு முறை தேயிலை கொழுந்து நிறைய இடப்படும் போதும் மூன்று கிலோ வீதம் குறைத்து நிறையிடுவதும் அதிகாரிகளினால் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்நிலையில் தேயிலை கொழுந்து நிறை இடுவதற்கு பயன்படுத்தப்பட்ட தராசு பறிமுதல் செய்யப்பட்டு இது தொடர்பில் வழக்கு தாக்கல் செய்வதற்கு நிறுத்தல் அளத்தல் திணைக்கள அதிகாரிகள் தீர்மானித்துதிருக்கின்றனர். தேயிலை கொழுந்தை நிறையிடுவதற்கு பொகவந்தலாவ பெருந்தோட்ட நிறுவனத்தின் கீழ் இயங்குகின்ற சகல தோட்டங்களிலும் இவ்வாறான தராசு பயன்படுத்தப்படுகிறது. இதன் மூலம் தோட்ட தொழிலாளர்களுக்கு சேர வேண்டிய கோடிக்கணக்கான ரூபாய்கள் முறைகேடான முறையில் கொள்ளையடிக்கப்படுகிறது.

பொகவந்தலாவ பெருந்தோட்ட நிறுவனம் டிஜிட்டல் முறையில் அளவீடு செய்கின்றோம் என்ற போர்வையில் தோட்டத் தொழிலாளர்களின் உழைப்பை சுரண்டி இலாபம் பெறுவதை முடிவுக்கு கொண்டு வர வேண்டும். நாம் மேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கை மூலம் பொகவந்தலாவ பெருந்தோட்ட நிறுவனத்தின் பிழையான தேயிலை அளவிட்டு முறையை தெளிவாக சுட்டிக் காட்டி இருக்கிறோம். இதைப் புரிந்து கொண்டு பொகவந்தாலாவ பெருந்தோட்ட நிறுவனத்திற்கு உட்பட்ட ஏனைய தோட்டங்களிலும் இம் முறையைப் பின்பற்றுவதை நிறுத்தி தோட்டத் தொழிலாளர்கள் தாம் பறிக்கும் கொழுந்தின் நிறையை சரியாகத் அறிந்து கொண்டு திருப்தி அடையும் விதத்திலான முறையை அறிமுகம் செய்ய வேண்டும். மேலும் இதே நிலைமை தொடருமாகவிருந்தால் தோட்டங்களில் அமைதியின்மை ஏற்படுவதோடு நாமும் உரிய நடவடிக்கை எடுப்பதற்கு தள்ளப்படுவோம் என்பதை பொகவந்தலாவ பெருந்தோட்ட கம்பனிக்கு தெரிவித்துக் கொள்கிறோம் என்றார்.

# விவசாயத்தில் ஈடுபடும் மாற்றுதிறனாளிகளுக்கு உலர் உணவு பொருட்கள் வழங்கள்











மட்டக்களப்பு மாவட்டத்தில் கோறளைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் வீட்டுத்தோட்டம் செய்யும் விஷேட தேவையுடையோருக்கு உலர் உணவு பொருட்கள் வழங்கும் நிகழ்வு இன்று சமூக பராமரிப்பு காரியாலயத்தில் இடம் பெற்றது.

கோறளைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் விஷேட தேவையுடையோரை ஊக்குவிக்கும் முகமாகவும் நாட்டின் பொருளாதார நெருக்கடியில் இருந்து மக்களை பாதுகாக்கும் நோக்கிலும் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் வழிகாட்டலில் பல்வேறு வேலைத்திட்டங்கள் இடம் பெற்று வருகின்றது.

இதன் அடிப்படையில் கோறளைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் வாழ்வின் உதயம் மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் அங்கத்தவர்கள் 128 பேருக்கு வை.எம்.சி.ஏ. நிறுவனத்தின் அனுசரனையில் வீட்டுத் தோட்ட செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

வீட்டுத்தோட்ட நடவடிக்கையில் ஈடுபடும் விஷேடதேவையுடைய 128 பேருக்கும் அரிசி, சீனி, பருப்பு, கடலை, தேயிலை, கோதுமை மா, சோயா மீட், சமபோச போன்ற பொருட்கள் ஒரு பொதி பத்தாயிரம் ரூபா பெறுமதியில் வழங்கி வைக்கப்பட்டது.

சமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.ஜெயசேகர் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் கோறளைப்பற்று உதவி பிரதேச செயலாளர் திருமதி அமலினி கார்த்தீபன், சமூக சேவை திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பிரேமானந்த சுதர்சினி, வை.எம்.சி.ஏ நிறுவனத்தின் மட்டக்களப்பு மாவட்ட பதில் பொது செயலாளர் எஸ்.பெற்றிக் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# வாழைச்சேனையில் தனிமையில் வீடொன்றில் வசித்து வந்த பெண் மரணம்





ந.குகதர்சன்

கல்குடா வீதி வாழைச்சேனையில் தனிமையில் வீடொன்றில் வசித்து வந்த பெண் ஒருவரின் சடலத்தை உறவினர்கள் வழங்கிய தகவலின் படி கண்டு பிடித்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

கற்குடா வீதி வாழைச்சேனையைச் சேர்ந்த திருமதி பாஸ்கரன் சற்குணதேவி வயது (52) என்ற 4 பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 15 நாட்க்களாக தமது சகோதரியின் தொலைபேசி அழைப்பு துண்டித்து காணப்படுவதாகவும் அவர் தொடர்பான தகவல்கள் எதுவும் தெரியவில்லையென அவரை தேடிப் பார்க்கும்படி வவுனியாவில் உள்ளவர் வாழைச்சேனைப் பிரதேசத்தில் வசிக்கும் தமது உறவினருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

அவர் இன்று காலை பிரதேச கிராம சேவகருக்கு தகவல் வழங்கியதை அடுத்து பொலிசாரின் துணையுடன் அவர் வசித்த வீட்டில் சென்று பார்த்தபோது உயிரிழந்த நிலையில் சடலத்தினை கண்டு பிடித்துள்ளனர்.

இவர் கடந்த 10 வருடங்களாக மலேஷியா நாட்டில் தொழில் புரிந்து வந்த நிலையில் கடந்த 2 மாதங்களாக வாழைச்சேனையில் உள்ள தமது வீட்டில் வசித்து வந்துள்ளார். தான் வசித்து வந்த வீட்டினை விற்பனை செய்து விட்டு வவுனியா திரும்பும் நிலையில் வீட்டினை விற்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த நிலையில் இவர் இவ்வாறு சடலமாக மீட்க்கப்பட்டுள்ளமை தமக்கு கவலையளிப்பதாக சகோதரி தெரிவிக்கிறார்.

கணவர் யாழ்ப்பான பிரதேசத்தில் பொலிஸ் உத்தியோகஸ்த்தராக கடமையாற்றி வருகின்றார் என்றும் இருவரும் பிரிந்து வாழ்ந்து வருவதாகவும் தெரிவித்தார்.

குறித்த சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# உலர் உணவு போதிகள் வழங்கி வைப்பு

(ஹஸ்பர்)









தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதிக்குட்பட்ட மீரா நகர்,கல்மெடியாவ தெற்கு ஆகிய கிராம சேவகர் பிரிவில் உலக உணவு திட்டம் மூலமாக உலர் உணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

உலக உணவு திட்டம் மூலம் வழங்கப்படும் குறித்த 12 கிராம சேவகர் பிரிவிலும் மொத்தமாக 2738 குடும்பங்கள் இதன் மூலமாக தெரிவு செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி அவர்களின் வழிகாட்டுதளிற்கிணங்க (09) கல்மெடியாவ தெற்கு,மீரா நகர் ஆகிய கிராம சேவகர் பிரிவுகளிலும் வைத்து வழங்கி வைக்கப்பட்டன. குறித்த உலர் உணவுப் பொதிகளானது தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்காக வழங்கப்பட்டன.

அரிசி,சீனி,பருப்பு உட்பட பல பொருட்கள் இப் பொதியில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பொருளாதார நெருக்கடி நிலையில் இருந்து தங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது

இதில் கல்மெடியாவ தெற்கு, மீரா நகர் கிராம உத்தியோகத்தர்கள்,பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ,உலக உணவு திட்ட உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்

# சொல்லத் துடிக்குது மனசு

## சோலையூர் குருபரன்

முன்பெல்லாம் கிராமத்துத் திருமணம் என்றால் திருமண வீடும் உறவினர் வீடுகளும் களைகட்டிக் கிடக்கும். அப்போதெல்லாம் மண்டபங்களில் திருமணம் நடப்பதில்லை. வீடுகளிலேயே திருமணங்கள் யாவும் நடக்கும்.

கோயில்களிலும் வீடுகளிலும் ஐயரைக் கொண்டு ஓமம் வளர்த்துரூபவ் அம்மி மிதித்துரூபவ் அருந்தத்ணீ பார்த்துத் திருமணம் செய்து வைக்கும் நடைதுறை மிக மிகக் குறைவாகவே காணப்பட்டண. உறவினர்கள் ஒன்று சேர்ந்து அவர்கள் முன்னிலையில் மரபுரூபவ் சம்பிரதாயம்ரூபவ் பழக்க வழக்கம்ரூபவ் ஒழுக்கலாறு என்பவற்றுக்கு உட்பட்டுத் சிறப்பாகத் திருமணங்கள் நடந்தேறின.

சொந்தங்கள் யாவும் ஒன்று சேர்ந்து மணமக்களை மனந்திறந்து உளமாற வாழ்த்தினர். அந்த வாழ்த்துக்களைப் பெற்ற மணமக்களும் மகிழ்ச்சியோடும் நீண்ட ஆயுளோடும் வாழ்ந்தனர்.

இப்போதெல்லாம் 95 வீதமான திருமணங்கள் பகலிலேயே நடக்கின்றன. அப்போது பெரும்பாலான முகூர்த்தங்கள் இரவு வேளையிலே இருக்கும். திருமண வீடுகளில் மாவிலைரூபவ் குருத்தோலைகளாலான சோடனைரூபவ் வாசலில் நிறைகுடம்ரூபவ் குத்துவிளக்குரூபவ் ஒரு தட்டத்தில் திருநீறுரூபவ் சந்தணம்ரூபவ் குங்குமப் பொட்டுரூபவ் பன்னீர்ச் செம்பு ஆகியவற்றை வைத்திருப்பார்கள்.

காணியின் பிரதான வாயிலில் பழுத்த வாலைக் குலையுடன் இரு வாழைகள் நடப்பட்டிருக்கும். அத்தோடு தென்னோலையினால் பின்னப்பட்ட சிறிய தோரணமொன்றும் காணப்படும். உறவினர்கள் யாவரும் ஒன்று கூடியிருப்பர். இரவு வெளைகளில் ஒளியூட்டுவதற்காகப் பெற்றோல்மாகஸ்ரூபவ் அரிக்கன் லாம்புரூபவ் கடல் லாம்பு ஆகியவற்றைப் பயன்படுத்தினர். வீடு முழுவதும் குதுகலமாகக் காணப்படும். இரவு முழுவதும் உறவினர்கள் கண்விழித்துத் திருமண வேலைகளில் ரூடவ்டுபட்டுக் கொண்டிருப்பர்.

சிறுவர்களிடையே ஆட்டம்ரூபவ் பாட்டு விளையாட்டுரூபவ் கும்மாளம் என விடு கலகலப்பாகச் சந்தோசமாக இருக்கும்.

தமது வீடுகளில் உறவினர்களால் தயாரிக்கப்பட்ட சீனிப் பலகாரம்ரூபவ் முந்திரிப் பலகாரம்ரூபவ் முறுக்கு ஆகியன அன்போடு பரிமாறப்படும். நமது மரபுப்படி வீட்டில உறவினர்களால் சமைக்கப்பட்ட ஆரொக்கியமான உணவு பனை ஓலைப் பாய் அல்லது பன்பாய் நிலத்தில் விரித்து அதில் அமரச் செய்து வழங்கப்படும்.



அங்கு உண்ணும் உணவு இன்று போல் அன்று நஞ்சாகியதாக யாரும் கூறக் கேள்விப்பட்டதில்லை. உணவு சமைக்கும்போது இன்றுபோல் அன்று அஜினோமோட்டோரூபவ் சிற்றிக் அசிட்ரூபவ் வினாகிரிரூபவ் மசாலாத்தூள்ரூபவ் சிக்கின் கியூப்ரூபவ் இன்னும் பல அதித சுவையூட்டிகள்ரூபவ் எண்ணெய்ரூபவ் கலரிங் ஆகியன பயன்படுத்தப்படவில்லை. அன்பு கலந்து விருப்போடு பக்குவமாகச் சமைத்திருப்பார்கள். அதனால் உணவு இயற்கையான மணம்ரூபவ் குணம்ரூபவ் சுவை கொண்டதாக இருக்கும். உறவினர்கள் உணவினை விருப்போடு உண்டனர்ரூபவ் மணமக்களை மனமாற வாழ்த்தினர். மகிழ்ச்சியோடு சென்றனர். திருமண வீடும் மூன்று நான்கு நாட்களுக்குக் களைகட்டிக் கிடைக்கும். அங்கு மகிழ்ச்சிரூபவ் குதுகலம் பொங்கிச் சந்தோசம் குடிகொண்டிருக்கும்.

மட்டக்களப்பில் தற்காலத்தில் நடைபெறும் திருமணச் சடங்குகளில் வழங்கப்படும் சிற்றுண்டி உபசரிப்புரூபவ் உணவு பற்றிப் பிரபலமான கவிஞர் ஒருவர் பாடிய கவிதை ஒன்று ஞாபகத்துக்கு வருகிறது.

ஓலையொன்று வந்தது
திருமண வீட்டிலிருந்து
ஓலையொன்று வந்தது
மரண ஓலையொன்று வந்தது
திருமண வீட்டிலிருந்து
மரண ஓலையொன்று வந்தது
மரண வாயிலுக்கு
அழைப்பு விடுக்கும்
மரண ஓலையொன்று வந்தது.

தொடரும்...




# பௌத்த பிக்குகள் எரித்தது 13ஐ அல்ல, ஒட்டுமொத்த நாட்டை

## (பாராளுமன்ற உறுப்பினர் - கோ.கருணாகரம் ஜனா)

(சுமன்)

பௌத்த பிக்குகள் எரித்தது 13வது திருத்தத்தை அல்ல, அவர்கள் ஒட்டுமொத்த நாட்டையே எரிக்கின்றார்கள் என்பதை அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும் என தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் ஜனா தெரிவித்தார்.

பாராளுமன்ற அமர்வில் ஜனாதிபதியின் நேற்றைய அக்கிராசன உரை மீதான விவாதத்தின் போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒட்டுமொத்தமான ஜனாதிபதியின் அக்கிராசன உரையிலே அதிகாரங்களைப் பரவலாக்கி புறையோடிப் போயுள்ள இந்த இனப்பிரச்சனைக்கு ஒரு தீர்வைக்காண வேண்டும் என்ற அடிப்படையில் அவர் உரையாற்றி இருந்தாலும், பொலிஸ் அதிகாரமற்ற அதிகாரப் பரவலாக்கல், ஒற்றையாட்சிக்குள்ளே அதிகாரப் பரவலாக்கல் என்பதை எங்களால் எள்ளளவும் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இலங்கையின் 75வது சுதந்திர தினம் இந்த வாரம் கொண்டாடப்பட்டிருக்கிறது. இலங்கை சுதந்திரம் அடைந்ததோ என்னவோ ஆனால் தமிழ் மக்களுக்கான சுதந்திரம் இல்லாமலே இருக்கின்றோம். ஒரு சொட்டு இரத்தமும் சிந்தாமல் சுதந்திரம் அடைந்தது இந்த நாடு. சுதந்திரம் அடைந்த போது இந்த நாட்டின் பொருளாதாரம் ஜப்பானின் பொருளாதாரத்திற்கு நிகராக இருந்ததாகக் கூறப்படுகின்றது. ஆனால் தற்போது பொருளாதார ரீதியிலே ஜப்பான் எங்கிருக்கின்றது, இலங்கை எங்கிருக்கின்றது என்பதை நாங்கள் சொல்லித் தான் தெரியவேண்டும் என்பதில்லை.

இந்தியாவைப் பொருத்தமட்டில் அகிம்சை ரீதியாகவும், ஆயுத ரீதியாகவும் போரடி சுதந்திரம் அடைந்த போது பாகிஸ்தான், பங்காளதேசம் போன்றன ஒன்றாகவே இருந்தன. பாகிஸ்தான் இந்தியாவில் இருந்து பிரிந்தாலும் பாகிஸ்தானை விட அதிகமான முஸ்லீம்கள் இந்தியாவில் வாழ்வது மாத்திரமல்லாமல் அவர்கள் பாதுகாப்பாகவும், சுதந்திரமாகவும், வளமாகவும் கூட இருந்து கொண்டிருக்கின்றார்கள். அங்கெல்லாம் முஸ்லீம்கள் வாழும் பிரசேங்களிலே இந்துக் கோயில்களோ இந்துக்கள் வாழும் பிரதேசங்களிலே பள்ளிவாசல்களோ அடாத்தாகவோ பலாத்காரமாக அமைக்கப்படுவதில்லை.

ஆனால், இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்து தமிழ் மக்கள் தமிழ் பேசும் மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்டே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இலங்கை சுதந்திரமடைந்த 1948ல் இருந்து முப்பது ஆண்டுகள் தமிழ் மக்கள் அகிம்சை ரீதியாகவும், முப்பது ஆண்டுகளுக்கு மேலாக ஆயுத ரீதியாகவும் போராடி வந்திருக்கின்றார்கள். 1949ம் ஆண்டு இலங்கையின் முதலாவது பிரதமர் டி.எஸ்.சேனநாயக்கா கிழக்கு மாகாணத்தைக் கபளீகரம் செய்வதற்காகவும், அங்குள்ள தமிழ், தமிழ் பேசும் மக்களை சிறுபான்மையினராக மாற்றுவதற்குமான வேலைத் திட்டத்தை கல்லோயாக் குடியேற்றம் மூலம் ஆரம்பித்தார்.

1921ம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் வெறுமனே 0.5 வீதம் சிங்கள மக்கள் வாழ்ந்த வரலாறு இருக்கும் போது இன்று 24 வீதமாக அவர்கள் உயர்ந்திருக்கின்றார்கள் என்றால் கல்லோய தொடக்கம், சேருவில, கந்தளாய் வரை குடியேற்றங்களை ஆரம்பித்தது மாத்திரமல்லாமல், அம்பாறை, சேருவில போன்ற தனித் தேர்தல் தெகுதிகளையும் உருவாக்கி இன்று 24 வீதமாக மாற்றியிருக்கின்றீர்கள்.

1956ம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டுவந்தீர்கள், ஸ்ரீயைக் கொண்டு வந்தீர்கள். அன்றிலிருந்து இன்று வரை எத்தனையோ பிரச்சனைகள் இங்கு நடந்து வந்திருக்கின்றன. 1958, 19%8, 1983 ஆகிய ஆண்டுகளிலே பாரிய இனக்கலவரங்களை உண்டுபண்ணியது மாத்திரமல்லாமல் 1983ம் ஆண்டு இடம்பெற்ற இனக்கலவரத்தின் மூலமாக தெற்கிலிருந்து வடகிழக்கிற்குக் கூடத் தமிழர்கள் செல்லமுடியாமல் கடல்வழியாக அனுப்பிய வரலாறுகளும் இருக்கின்றன. அதுமாத்திரமல்லாமல் வெலிகடை வெஞ்சிறையில் 53 தமிழ்க் கைதிகள் கொடூரமாகக் கொல்லப்பட்டார்கள். தமிழ் ஆயுதப் போராட்டத்தை முதல் முதலில் தொடக்கிய தமிழ்ஈழ விடுதலை இயக்கத்தின் ஆரம்பகர்த்தாக்களான குட்டிமணி தங்கத்துரை போன்றவர்கள் மிகவும் கொடூரமாகக் கொல்லப்பட்டார்கள்.

குட்டிமணி அவர்கள் நீதிமன்றத்திலே உரையாற்றும் போது எனக்குத் தூக்குத் தண்டனை வழங்கப்படுகின்றது. அந்தத் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டால் நான் ஒரு குட்டிமணி இறப்பேன். ஆனால் அதன் பின் ஆயிரம் ஆயிரம் குட்டிமணிகள் இந்த நாட்டிலே வடகிழக்கிலே உருவாகுவார்கள். அவர்கள் மூலமாக தமிழீழம் மலரும். மலரும் தமிழீழத்தை எனது கண்களால் நான் பார்க்க வேண்டும். எனவே என்னுடைய கண்களை ஒரு பார்வையற்ற தமிழனுக்கு வழங்க வேண்டும் என்று கூறியதற்காக அவரைக் கொன்றதோடு மாத்திரமல்லாமல், அவரது கண்களைத் தோண்டி சப்பாத்துக் கால்களில் மிதித்த வரலாறுகள் கூட இருக்கின்றது.

1983 இனக்கலவரத்தைத் தொடர்ந்தே ஆயுதப்போராட்டம் வீறுகொண்டதை அனைவரும் அறிவோம்;. வடகிழக்கில் இருந்து ஆயிரக்கணக்கான இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தில் இணைந்தார்கள். மிகவும் உக்கிரமாக இந்த நாட்டிலே போர் நடந்த வரலாறுகள் இருக்கின்றன. 1987ம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தம் எற்பட்டது. இலங்கை இந்திய ஒப்பந்தம் ஏற்படாவிட்டால் நாங்கள் தனி ஈழம் பெற்றிருப்போம், தனிநாடு மலர்ந்திருக்கும் என்று இன்றும் தமிழர்கள் கூறுகின்றார்கள். இலங்கை இந்திய ஒப்பந்தம் மூலமாக ஏற்பட்ட 13வது திருத்தச் சட்டம் அரசியலமைப்பில் ஒரு அங்கமாக இருக்கும் போது அந்த அரசியலமைப்பை மாறி மாறி ஆட்சி



செய்த அரசாங்கங்கள் நிறைவேற்றாமல் இருப்பதென்பது அரசாங்கமே அரசியலமைப்பை மீறுவதாகவே அமையும்.

எனக்கு முன் உரையாற்றிய உதயகம்மன்பில அவர்கள் 13வது திருத்தத்தின் பின்னர் இந்த நாட்டை % ஜனாதிபதிகள் ஆட்சி செய்திருந்தார்கள் யாருமே பொலிஸ் அதிகாரத்தை அமுலாக்கவில்லை என்று தெரிவித்திருந்தார். இதிலிருந்து நீங்களே அரசியலமைப்பை மீறிக்கொண்டிருக்கின்றீர்கள் என்பதே தெளிவாகின்றது. முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் உரையாற்றும் போது இந்த நாடு பௌத்த நாடு பௌத்த பிக்குகளை எதிர்த்துக் கொண்டு எதனையும் செய்ய முடியது அவர்களைப் பகைத்துக் கொண்டு இந்த நாட்டிலே ஒரு தீர்வைத் தர முடியாது என்ற கோணத்திலே உரையாற்றியிருந்தார்.

நான் அவருக்கு ஒன்றை மட்டும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன் 2015ல் அவரை ஜனாதிபதி ஆக்;கியது சிறுபான்மை மக்கள். ஆனால் இன்று அந்த மக்களது கருத்தைக் கூட கருத்தில் எடுக்காமல் அவர் இந்த உரையை ஆற்றியிருப்பதையிட்டு அவர் குறித்தும், அவருக்காக வடகிழக்கு தமிழ் மக்களிடம் வாக்குக் கேட்டேன் என்ற அடிப்படையிலும் நான் வெட்கப்படுகின்றேன்.

ஆயுதப் போராட்டம் ஏற்பட்டதன் காரணாகவே 13வது திருத்தச் சட்டம் உருவானது 13வது திருத்தம் என்பது தமிழ் மக்களுடைய ஒரு அரசியற் தீர்வல்ல. தமிழ் மக்களின் அரசியற் தீர்வுக்கு இதனை ஒரு ஆரம்பப் புள்ளியாகவே கருதுகின்றோம். எனவே எங்களுக்குத் தேவை மீளப்பெறமுடியாத ஒரு சமஸ்டி என்பதை நாங்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றோம். ஏனெனில் 13வது திருத்தத்தின் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்களையே மீளப் பெற்ற வரலாறுகளே இருக்கின்றன.

நேற்றைய தினம் பௌத்த பிக்குகள் 13வது திருத்தத்தை எரிக்கின்றார்கள். நீங்கள் எரித்தது 13வது திருத்தத்தை அல்ல, ஒட்டுமொத்த நாட்டையே எரிக்;கின்றீர்கள் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். பண்டா செல்வா ஒப்பந்தம் ஏற்பட்ட போது கொழும்பில் இருந்து கண்டிக்கு யாத்திரை சென்றது எதற்காக? அன்று அந்த ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டிருக்கும் என்றால் இந்த நாடு அழிவுப் பாதைக்குச் சென்றிருக்காது என்பதை நீங்கள் அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.

# உள்ளூராட்சி மன்றத்தேர்தல் 2023

## மண்முனை தென்மேற்கு (பட்டிப்பளை) இலங்கை தமிழரசுக்கட்சி வேட்பாளர்கள்




































கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரங்கள்

# உள்ளூராட்சி மன்றத்தேர்தல் 2023
## மண்முனை தென்மேற்கு (பட்டிப்பளை) இலங்கை தமிழரசுக்கட்சி வேட்பாளர்கள்

























கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரங்கள்